www.tamilarangam.net

★ 1977-இல் இனக் கலவரத்தை மூட்டி விட்டு 50 ஆயிரம் தமிழர்களை ஏதிலி (அகதி)களாக்கிய—

★ ஆயிரம் தமிழர்களைப் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்த—

★ கோடிக்கணக்கான உரூபாய் பெறுமதியுள்ள தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடிய—

★ பாதிக்கப்பட்ட தமிழர்களை வாழ்விக்க அமைக்கப்பட்ட 'அகதி' முகாம்களை அழித்தொழித்த—

★ 'கன்னுட்டி' அகதிகள் மறுவாழ்வுப் பண்ணையை அழித்து, ஏதிலித் தமிழர்களை அடித்து விரட்டிய—

★ விசாரணையின்றி ஆயிரக்கணக்கான தமிழிளைஞர்களை சிறையிலிட்டு வதைத்துவருகிற—

★ தமிழர்வாழ் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றி, தமிழ் மண்ணைப் பறித்த, பறித்து வருகிற—

★ தமிழர்களைத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வெளியேற்றி, சிங்களக் குடியேற்றங்களை அங்கே நிலைநிறுத்துவதன் மூலம் தமிழினத்தின் தேசிய உரிமையைப் பறிக்கச் சதி செய்து வருகிற—

★ அரசுத்துறை, இராணுவம், கடற்படை ஆகியவற்றில் தமிழர்களுடைய நியாயமான பங்கைப் பறித்து, சிங்கள மயமாக்கி வருகிற—

★ தமிழ் பேசும் மக்களை இந்துக்கள், முஸ்லிம்கள் என்று பிரித்து தமிழின ஒற்றுமையைச் சிதைத்து வருகிற—

★ இலங்கை, தமிழர்கள்—சிங்களவர்கள் ஆகிய இரு தேசிய இனங்கள் வாழும் இரு நாடுகளைக் கொண்ட ஒரு தீவு என்பதை மறைத்து, அதைத் தனிச் சிங்கள—புத்தமத நாடாக உலகுக்குக் காட்டுவதன் மூலம் தமிழர்களின் இறைமையை மறுக்கிற—

# சிங்கள வெறியர் ஜெயவர்த்தனவைக் கண்டிக்கிறோம்.

---

## வெள்ளையர் உருவாக்கிய ஏகாதிபத்தியத்தின் மூலம் இன்று இலங்கைக் குடியரசுத் தலைவராகவுள்ள

# ஜெயவர்த்தனவே.....

★ விசாரணையின்றிக் காவலில் வைத்துள்ள தமிழிளைஞர்களை உடனே விடுதலை செய் !

★ தமிழின உரிமைக்காகப் போராடியோர்மீது போடப் பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறு !

★ தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டத்தை உடனே கைவிடு !

★ மலையகத் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்காதே !

★ சாஸ்திரி-பண்டா ஒப்பந்தத்தைக் கைவிட்டு இலங்கைவாழ் இந்திய வம்சா வழியினர் அனைவருக்கும் அனைத்து உரிமைகளையும் உடனே வழங்கு !

★ மலையகத் தமிழர்கள் **ஈழத்தில்** குடியேறுவதைத்தடுக்காதே!

★ தமிழர்களின் **'ஈழநாட்டு'க்** கோரிக்கையை மறுக்காதே!

**இனஒடுக்கல் எதிர்ப்பியக்கம்**

சென்னை-24

(தமிழ்நாடு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்